ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(பஅ5)துறை
தலைமைச் செயலகம், சென்னை-9.
தொலைபேசி 044-25673318
தொலையச்சு 044-25675849
இணையதளம்:www.tnrd.gov.in

14 DEC 2021

**கடித எண்.12274/பஅ-5(1)/2021-2, நாள்: 20.11.2021.**

08 DEC 2021

அனுப்புநர்
திருமதி.மாணிக்கம் கஸ்தூரி, எம்.ஏ., பிஜிடிபிஏ., டி.எல்.எல்.,
அரசு துணைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,
சென்னை – 15. (இணைப்புடன்)

அய்யா,

பொருள்: பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – விழுப்புரம் மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான ஈப்பு ஓட்டுநர் திரு.வி.ஏழுமலை என்பவரின் மகள் செல்வி.E.ஈஸ்வரி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிவரன்முறை செய்யப்பட்டது – அசல் சான்றுகள் திருப்பி அனுப்பதல் – தொடர்பாக.

பார்வை:
1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.23419/2021/டி1, நாள் 26.07.2021.
2. அரசாணை (3ப) எண்.31, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(பஅ-5) துறை, நாள் 20.11.2021.

----

பார்வையிலுள்ள கடிதம் மற்றும் அரசாணையின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

..2..

2. பார்வை இரண்டில் வெளியிடப்பட்ட அரசாணையினைத் தொடர்ந்து பார்வை ஒன்றில் காணும் தங்கள் கடிதத்துடன் பெறப்பட்ட தனியரின் கீழ்கண்ட மதிப்பெண் சான்று மற்றும் மாற்றுச் சான்றுகள் அசலாகத் தங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுகிறது.

| வ. எண். | சான்றிதழ் | SSLC சான்றிதழ்களின் வரிசை எண்/வருடம். | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் | SEC 9478703 / மார்ச் 2011 | 1 |
| 2. | மாற்றுச் சான்றிதழ் | 29236 | 1 |

3. மேற்குறிப்பிட்டுள்ள சான்றுகளைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அரசுக்கு உடனே அனுப்பும்படி தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு துணைச் செயலாளருக்காக.

**நகல்:**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
விழுப்புரம்.

சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – விழுப்புரம் மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான திரு.வி.ஏழுமலை என்பவரின் மகள் செல்வி.E.ஈஸ்வரி - இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ-5) துறை

அரசாணை (3ப) எண்.31

நாள் 20.11.2021.
பிலவ, கார்த்திகை 4,
திருவள்ளுவர் ஆண்டு 2052.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ந.க.எண்.பஅ1/3493/2020, நாள்: 29.12.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.23419/2021/டி1, நாள் 26.07.2021.

----------

ஆணை:

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் உபகோட்டம் உதவி செயற்பொறியாளர்

..2

அலுவலகத்தில் ஈப்பு ஓட்டுநராகப் பணிபுரிந்து 18.07.2020 அன்று காலமான திரு.வி.ஏழுமலை என்பவரின் வாரிசுதாரரும் மகளுமான செல்வி.E.ஈஸ்வரி என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், விழுப்புரம் மாவட்ட ஆட்சியரகத்தில் (வளர்ச்சி பிரிவு) இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 08.01.2021 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படியும், மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகள் செல்வி.E.ஈஸ்வரி கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 18.09.2020 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 13.12.1996 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 23 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனத் தெரிவித்து, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கூர்ந்தாய்வு செய்து இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி.E.ஈஸ்வரி என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், விழுப்புரம் மாவட்ட ஆட்சியரகத்தில் (வளர்ச்சி பிரிவு) இளநிலை உதவியாளர் பதவியில் 08.01.2021 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற உரிய பணி விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 01.11.2021-ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.17868/ட்டி.1/2021 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண் 34758/ஜி1/2021, நாள்: 16.11.2021-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

K. கோபால்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் மாவட்டம்.
செல்வி.E.ஈஸ்வரி, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, விழுப்புரம் மாவட்டம்.
(வழி: மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் மாவட்டம்.)
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், விழுப்புரம் மாவட்டம்.

**நகல்:**
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.